2nd August 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அந்த ஓர்க் ஷாப்பில் வேலை செய்யும் தொழிலாளர்கள் குறைந்த அளவில்தான் இருக்கிறார்கள். அங்கு செய்யப்படும் வேலையும் குறைவாகத்தான் இருக்கிறது. அந்த வேலைகளை டிரான்ஸ்போர்ட் ஓர்க்ஷாப்பில் செய்து கொள்ளலாம். அதனால் கஷ்டமும் இருக்காது, நஷ்டமும் இருக்காது. இதைப்பற்றி மறுபரிசீலனையாவது செய்து அதைச் சேர்ப்பதற்கு வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதில் மறு பரிசீலனை செய்வதற்கு ஒன்றும் இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, மறு பரிசீலனை செய்வதற்கு இட மில்லை என்று சொல்லியது ஓரளவு உண்மையாகக் கூட இருக்கலாம்; இருந்தாலும் அம்மாதிரி சேர்ப்பதால் செலவு குறையலாம் அல்லவா ? சிக்கனம், சிக்கனம் என்று சொல்லக் கூடிய அமைச்சர்களுக்கும் இது நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏன் அப்படிச் செய்யக் கூடாது ?

கனம் திரு. பூ. கக்கன் : தீயணைப்புப் படையைச் சேர்ந்த மோட்டார் என்ஜின்ஸ் வெகு சீக்கிரத்தில் ரிப்பேர் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படவேண்டும். அதை விட்டு டிரான்ஸ் போர்ட் ஓர்க்ஷாப்புக்குப் போனால் அவர்கள் வேறு வேலை இருக்கிறது என்று உடனடியாகச் செய்ய முடியாமல் போகலாம். அப்போது அந்தப் பகுதியில் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் கஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தினால் தான் தனியாக வைக்கவேண்டு மென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

***29 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள தீயணைக்கும் படை தொழில்கூடத்தை 9-12-1965-ல் இரண்டாவது வட்ட தொழிற்சாலை ஆய்வாளர் பார்வையிட்டாரா ?

(இ) ஆமெனில், அது குறித்து I. G. அவர்களுக்கு புகார் ஏதேனும் செய்திருக்கிறாரா ?

(உ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) சென்னையிலுள்ள தீயணைக்கும் படை தொழில் கூடத்தை 9-12-1965-ல் மூன்றாவது வட்ட தொழிற் சாலை ஆய்வாளர் பார்வையிட்டார்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்வி எழவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தொழிற் சாலையைப் பார்வையிட்ட அதிகாரி அங்கே வைக்கப்பட்டுள்ள புகார்ப் புத்தகத்தில் எதையும் எழுதாமல் போயிருப்பாரானால்,

[2nd August 1966

அந்தத் தொழிற் சாலையைப் பார்வையிட்டதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? ஏன் உண்மையைச் சொல்ல மறுக்கிறார் என்று கேட்கிறேன்.

கனம் சபாநாயகர்: யார் மறுக்கிறார்? It is not a question. Let the hon. Member put a question.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, எனக்கு வந்த தகவல்களெல்லாம் அந்தத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையை விரும்பிச் சொன்னார்கள். அந்தக் கோரிக்கைகளை அப்படியே அந்த அதிகாரி புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அதை எழுதி ஐ.ஜி. அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைத்தான் கேட்டேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. தொழிலாளர்களின் வருத்தம் தீரவில்லை என்பதுதான் முக்கிய காரணம்.

கனம் சபாநாயகர்: கோரிக்கை எழுதுவதற்காக இன்ஸ்பெக்ஷன் புஸ்தகம் இல்லை. தான் தொழிற்சாலையைப் பார்வையிட்டது பற்றி ஏதாவது தகவல் எழுதவேண்டுமென்றால் அதைத்தான் இன்ஸ்பெக்ஷன் புஸ்தகத்தில் எழுதுவார்கள். கோரிக்கையைப் பற்றி இன்ஸ்பெக்ஷன் புஸ்தகத்தில் எழுதுவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி அது குறித்து ஐ.ஜி அவர்களுக்குப் புகார் ஏதேனும் செய்திருக்கிறாரா என்பதுதான். இல்லை என்று பதில் சொன்னேன். கோரிக்கை ஏதேனும் இருக்கிறதா என்பதைப்பற்றி கேள்வி இல்லை. புகார் எழுதவில்லை என்று பதில் சொன்னேன்.

முத்திரைத் தாள்கள்

*30 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மின்சார பம்பு செட்டுகள் அமைக்க செய்யப்படும் அக்ரிமெண்டில் ஒட்டப்படும் ரூ. 2.30 புதுக்காசு ஸ்டாம்பு தமிழக மக்கள் அனைவருக்கும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மட்டும் விற்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், வட்டத் தலைநகரில் கிடைக்க ஆவன செய்யப்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: (அ) ஆம். (இ) கோயம்புத்தூர், திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள கருவூலங்களிலும் இந்த முத்திரைத் தாள்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. தங்கவேலு: மின்சார பம்பு செட்டுகள் அமைக்க செய்யப்படும் அக்ரிமெண்டில் ஒட்டப்படும் ரூ. 2.30 ஸ்டாம்புக்காக இந்த மாநிலத்தில் உள்ள அனைவரும் சென்னை கலெக்டர் ஆபீசுக்கு வந்து வாங்கவேண்டியிருக்கிறது. அந்த மாதிரி விதி இருப்பதினால் ரூ. 2.30 காசுக்கு அதிகமாகச் செலவு செய்து கொண்டு வர